161



ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஸ்வதர்மத்தை விட்டாவது தேசநன்மைக்காகப் பாடுபடவேண்டுமென்று தற்காலத்தில் சிலர் ஸ்வதர்மத்திலேயே த்வேஷம் வைக்கிறார்கள். அது உசிதமென்றும் நினைக்கிறார்கள், நம் முன்னோர் அப்படி அபிப்பிராயப்படவில்லை. ஏனெனில் தன்னை ரக்ஷித்துக்கொண்டவன்தான் பிறரை இரக்ஷிக்கச்சக்தனாயிருப்பன், ஸ்வதர்மத்தை பரிபாலனம் செய்பவனே தன்னை ரக்ஷித்துக்கொள்வான். இது சாஸ்திரத்திற்கும், யுக்திக்கும், அனுபவத்திற்குமொத்தது. ஆகையால் ஸ்வதர்மத்தைவிட்டவன் தன்னையெப்படி இரக்ஷித்துக்கொள்ளுவான்? தன்னை இரக்ஷித்துக்கொள்ளச்சக்தியற்றவன் பிறரை எப்படி கைதூக்கிவிடுவான்? வியாதியில்லாமல் ஸ்வஸ்தனாயிருப்பவனல்லவா வியாதிஸ்தரைச்சிகித்ஸைசெய்து காப்பாற்றுவான். ரோகத்தால் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருப்பவன் பிறருடைய வியாதியை எங்ஙனம் நீக்குவான்? பணத்தைத்தேடிப் புதைத்துவைத்திருப்பவனல்லவா ஸமயம்நேர்ந்தபோது பணத்தாலுபகரிப்பான்? முன்னோர்தேடிவைத்திருந்த பணத்தைத்தெருவிலிறைத்தவன் பணத்தாலெப்படி உதவிபுரிவான்? பெற்றோரைப்போற்றிவளர்த்தவனல்லவா சுற்றத்தாரையும் கெவனிப்பான். பெற்றோரைப்போஜனம்கொடாமல் பரக்கவிட்டவன் மற்றோரை எப்படி கெவனிப்பான்? இதுபோல் தன்னுடைய சிரேயஸ்ஸுக்குக் காரணமாகிய ஸ்வதர்மத்தைக்கைவிட்டவனா அன்னியர்களுடைய க்ஷேமத்தைக்கருதுவான் ஆகையால் எவ்வளவு ஆபத்துவந்தாலும் ஜகத்து தலைகீழாக மாறினாலும் ஸ்வதர்மத்தை விடாதவர்களே மேலானவர்கள், அந்த தர்மபலத்தால் தன்னையும் அன்னியரையும் காப்பாற்றுவார்கள். அவர் சொற்படி நடந்தால் இஹத்திலும் க்ஷேமத்தையடையலாம்; பரத்திலும் சிரேயஸ்ஸைப்பெறலாம். தனக்குப்பின்வரும் சிரேயஸ்ஸைக்கோருகின்றவன் ஸ்வதர்மத்தைக் கைவிடவேமாட்டான். பின்னிட்டுள்ளது எங்ஙனமேனுமாகட்டும், தற்போதுள்ளதை கெவனிப்போமென்றவன் பின்னிட்டுக்கஷ்டப்படுவது யாவருக்குந்தெரிந்த விஷயம். ஆகையால் அவர்கள் சொல்லுவது க்ஷேமகரமாகாது. ஸ்வதர்மத்தைப் பரிபாலிப்பவர் உபதேசிப்பதுதான் சிரேயஸ்கரம். அவர்கள் சொற்படி நடப்பதே நன்று. சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

சுக்ல ௵ சித்திரை ௴ ௨௰௨

## பிராமாணிகர் செய்த உபதேசந்தான் பலிக்கும்.

ஒரு காரியத்தை ஒருவனைக்கொண்டு செய்விக்கமுயன்றவன் முதலாவது தான் சொல்லுவதற்கு இன்னது பிரமாணமென்றும் அது தன்னால் நன்கு ஆராய்ச்சிசெய்யப்பட்டிருக்கிறதென்றும் அதில் கூறப்படுகின்றபடி நம்பிக்கையுடன் தன்னால் அநுஷ்டிக்கப்படுகிறதென்றும் பிறர் நம்பும்படி செய்யவேண்டும் அப்படி நம்பிக்கைவந்தவனுக்குச் சொன்னால்தான் அவனதைக்கேட்பான், நம்புவான், நடத்தவும் முயலுவான், அதன் பயனையும் பெறுவான். ஆகவே உலகநன்மைக்காக ஒரு தர்மகாரியத்தைச் செய்விக்கமுயன்றவன் தர்மத்தில் பிரமாணமெதுவென்று முதலில் தீர்மானிக்கவேண்டும். தர்மத்தில் சுருதி, ஸ்மிருதி, ஸதாசாரமிவைகள்தான் பிரமாணமேயல்லாது அவரவர்களுக்குத்தோன்றுவதெல்லாம் பிரமாணமாய்விடமாட்டாது தற்காலத்தியவர்கள் இவ்விதமங்கீகரிக்கமாட்டார்கள், எவ்வெப்போது எவரெவர்களுக்கு எதெது பிரமாணமாகத் தோன்றுமோ அதிலிருந்து எது தர்மமாகத்தோன்றுமோ அவ்வப்பொழுது அவையெல்லாம் பிரமாணமெனவும் தர்மமெனவும் அவரவர்கள் சொல்லிவருகிறார்கள். அதில் ஒருவர் சொல்லுகிறபடி மற்றொருவர் சொல்வதில்லை. அம்மட்டோடில்லாமல் பிறர் சொல்லுவதைக் கண்டித்தும் வருகிறார்கள். இதில் வேறொரு ஆச்சர்யம். அதாவது—தான் முந்திச் சொன்னதையே எப்பொழுதும் சொல்லுவதில்லை. ஆனால் ஒரு ஸமயம் நாஸ்திகச்சார்பாயிருந்துபேசுவார்கள். அடுத்தபடி அதே நாஸ்திகமதத்தைக்கண்டிக்க ஆஸ்திகர்போல் ஆய்விடுவார்கள். ஆஸ்திகமதத்திலிருந்தும் சிறிதுகாலம் வர்ணாச்ரமதர்மங்களையாதரிப்பார்கள். பிறகு காலத்திற்கேற்றபடி எல்லாவற்றையும் மாற்றிவிடவேண்டுமென்றும் அப்படியானால்தான் தேசம் முன்னேற்றமடையுமென்றும் குருட்டுத்தனமாகப் பழைய ஏற்பாடுகளையே

நம்பியிருந்துவிட்டால் க்ஷேமம் கிடைக்காதென்றும் பேசத் துணிந்துவிடுவார்கள். இவ்வாறு முன்னுக்குப்பின் விரோதமாய்ப் பேசுவதைத்தப்பாக அவர்கள் நினைப்பதில்லை. மனதிலொன்று வெளியிலொன்றாகச் சிலரைப்போல் எங்களுக்குப் பேசத்தெரியாது. மனதில் பட்டதைச் சொல்லிவிடுவோமென்று அதை குணமாகவே நினைப்பார்கள். இப்படிப் பிரமாணவியவஸ்தையில்லாமலும் முன்னுக்குப்பின் விரோதமாயும் தோன்றியபடியெல்லாம் பேசுகிறவர்களின் உபதேசம் விவேகியான எவரிடத்தில் பலிக்கும்? சுருதிஸ்மிருத்தியாதிகளைப் பிரமாணமாக நம்பி அதிற்கூறியபடி காலதோஷத்தால் முற்றிலும் செய்யமுடியாவிடினும் அவசியமாயுள்ளதையாவது விடாமற்செய்து சிரேயஸ்ஸையடைவோமென்று வைதிகதர்மத்தையாதரிப்பவர்களிடம் இவர்களது உபதேசம் பலிக்குமா? வைதிகர்களை நிந்தித்துவிடுவதால் மாத்திரம் அவர்கள் மற்றவருக்கு வசப்பட்டுவிடுவார்களா? தர்மோபதேசத்திற்கு அதிகாரிகள் தர்மசாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்க அவர்களையடக்கி அனதிகாரிகள் அதில் தலையிடுவதே தர்மசாஸ்திரவிரோதமாயிருக்கிறது. தார்மிகர்களாயிருந்தால் தர்மசாஸ்திரவிரோதமாய் நடப்பார்களா? நடக்கவேமாட்டார்கள். ஆகவே தர்மசாஸ்திரவிரோதமாய் நடக்கத்துணிந்தவர்கள் தர்மத்தைப்பற்றிப் பேசமுன்வருவதே தப்பான கார்யம். கலிமஹாராஜனிடம் கைக்கூலிவாங்கி தர்மத்தையழிக்கத்தலைப்பட்டவர்களல்லவா இவர்கள்? இத்தகைய இவர்களது நிலைமையைத் தார்மிகர்கள் தீர்மானமாகத் தெரிந்துகொண்டுவிட்டார்கள். ஆகையால் இனிமேல் இவர்களது உபதேசம் பலிக்கமாட்டாது. பிராமாணிகர் செய்த உபதேசந்தான் பலிக்கும். சுருதி, ஸ்மிருதி முதலியவைகளை பிரமாணமாகக்கொண்டவர்களே பிராமாணிகராவர். அவர்கள் தர்மம் தரணியில் பரவவேண்டுமென்ற ஆவலுடன் அதிகாரிகளாயுள்ளவர்களுக்கு அதிகாரத்திற்குத் தக்கவாறு ஸாதனங்களையுபதேசிப்பார்கள். அவைகளாவன—ஸம்ஸ்காரங்கள் என்று சொல்லப்படும் கர்மங்களேயாகும். அதில் நமது ஆர்யதர்மத்தில் 13வது புத்தகத்தின் சில ஸஞ்சிகைகளில் கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம். நாமகரணம், அன்னப்பிராசனம், சௌளம் ஆகிய ஸம்ஸ்காரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் சௌளத்தைப்பற்றி இன்னும் சிறிது கூறவேண்டியிருக்கிறது. அதை இங்கு கூறுவாம்.

## ஸம்ஸ்காரம். 7-வது சௌளம்.

பூர்வீகாசாரப்படி சிகை வைக்கவேண்டும். அக்காலத்தில் வைத்த குடுமியை எக்காலத்திலும் எடுக்கக்கூடாது. அபராதம் செய்தவனுக்கு ஐங்குடுமி முதலியவைகளை வைத்து சிக்ஷைசெய்யும்படி ராஜாங்கத்தாரால் ஆக்ஞை செய்யப்படாதவரை சிகையை மாற்றப்படாது. சிரௌதமான சில ஸத்ரயாகத்தில் சிகையை வபனம்செய்யும்படி விதிக்கப்பட்டிருப்பதால் அதில் சிகையை எடுக்கலாம். இவ்வாறு விதிக்கப்பட்டவிடந்தவிர மற்ற காலங்களில் சுயேச்சையாக சிகையை மாற்றலாகாது சௌளகாலத்திலாவது சௌளத்தை அதன் காலத்தில் செய்யமுடியாவிடில் உபநயனகாலத்திலாவது எவ்விதம் சிகை வைக்கப்படுகின்றதோ அதை அப்படியே வைத்திருக்கவேண்டும். சிகையைத்தவிர மற்ற கேசங்கள் வளர்ந்துவிடுமாகில் அவைகளை வபனம்செய்துவிடவேண்டும். வபனம்செய்துகொள்வது அதிகாரிபேதத்திற்குத் தக்கவாறு வெவ்வேறுவிதமாகும். அதாவது ப்ரம்மசாரிக்குக் கழுத்துபரியந்தந்தான் வபனம். ஸமாவர்த்தனம் செய்துகொண்டபின் கிரஹஸ்தனாயிருக்கும்பொழுதும் ஸர்வாங்கவபனம் செய்துகொள்ளவேண்டும். அதில் ஒரு விசேஷமுண்டு ஸர்வாங்கவபனம் என்றால் மணிக்கட்டுக்குமேல் முழங்கைவரையுள்ள முன்கையிலிருக்கும் ரோமங்களையும், புருவங்களிலுள்ள ரோமங்களையும் விலக்கி மற்ற அங்கங்களிலுள்ள ரோமங்களையெடுப்பதாகும். "प्रकोष्ठभ्रूलतावर्जम्" என்ற வசனத்தால் அவைகளிலுள்ள ரோமங்களை வபனம்செய்துகொள்வது விலக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் முதுகிலுள்ள ரோமங்களையும் வபனம் செய்யவேண்டியதுதானேயென்றால் சிஷ்டாசாரத்தால் அதை எடுப்பதும்கூடாது வபனத்தை நாள்நக்ஷத்திரம் பார்த்துத்தான் செய்துகொள்ளவேண்டும். அதற்காக நமது தர்மசாஸ்திரகிரந்தங்களிலும் சோதிடசாஸ்திரத்தின் முகூர்த்தகிரந்தங்களிலும் வபனத்திற்குறிய திதிவாரநக்ஷத்திராதிகள் விதிக்கப்படுகின்றன ஆனால் இப்படி நாள்பார்ப்பது ஆஹிதாக்னிகளுக்கும் ஸந்நியாஸிகளுக்கும் கிடையாது. ஆஹிதாக்னிகளுக்கு பர்வகாலங்களும் விசேஷமாய் விதிக்கப்படுகின்றன. ஸந்நியாஸிகளுக்கு ருதுக்கள்தோறும் அதாவது இரண்டுமாதத்திற்கு ஒருதடவை பௌர்ணமியில்வபனம் விதிக்கப்படுகிறது. தீக்ஷாகாலங்களில் வபனம்செய்து

கொள்ளக்கூடாது. சௌளம், உபநயனம், விவாஹமிவைகளானதும் இவ்வளவு காலம் தீக்ஷையாயிருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது மாத்ருதீக்ஷை, பித்ருதீக்ஷை முதலியவைகளில் வபனம் நிஷேதிக்கப்படுகின்றது. இதுவும் ஜ்யேஷ்டபுத்திரனாயிருப்பவனுக்குத்தான், கனிஷ்டனுக்கு மாத்ருபித்ருதீக்ஷாதிகள் கிடையாது. ஜ்யேஷ்டனுக்கும் மாதாபிதா காலஞ்சென்றபின் ஒருவருஷபரியந்தம் கேசதாரணம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருப்பது விசேஷந்தான், பார்யை கர்ப்பிணியாயிருக்கும்போதும் தீக்ஷாநியமமுமுண்டு, அதை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும், இவைபோன்ற தீக்ஷாநியமாதிகாலந்தவிற மற்ற காலங்களில் அனாவச்யமாக கேசங்களையும் ரோமங்களையும் வளர்க்கக்கூடாது. கிரஹஸ்தன் மாதாபித்ருமாணதினம் முதலிய குறிப்பிட்டகாலந்தவிற மற்ற காலங்களில் ஆர்த்தக்ஷௌரம் முகக்ஷௌரம் இவைகளைச் செய்துகொள்ளக்கூடாது. இவ்வாறு சௌளத்தையொட்டி சில விசேஷங்கூறப்பட்டது. இனி உபனயனத்தை நிரூபிப்பாம். சுபம். ப—ர்

## தேவகோட்டை வைதிகதர்மாசாரஸபை.

இவ்வூரில் ஸ்தாபனஞ்செய்யப்பட்டிருக்கும் வைதிகதர்மாசாரஸபையினாதரவில் ஸ்ரீகாஞ்சிகாமகோடிபீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் மடம் ஆஸ்தானவித்வானும் மேற்படி மடத்திலிருந்து பிரசுரமாகும் ஆர்யதர்மபத்திரிகையின் பத்திராதிபருமாகிய பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷணம் வாகூர் வி. எஸ். வெங்கட்டராமசாஸ்திரிகளவர்கள் சுக்ல-ஸு சித்திரை-மீ 12உ முதல் 5-தினங்கள் இவ்வூரில் சிலம்பணி துவாதசிமடத்தில் மாலை 6-30மணி முதல் பிராம்மண்யம் என்ற விஷயத்தையும் பிராமணனுக்குரிய ஸம்ஸ்காரங்களின் ஆவசியகதையையும் அவற்றின் ஸ்வரூபத்தையும் குழந்தைகளுமறியுமாறு தெளிவான லௌகிக திருஷ்டாந்தங்களுடன் மிகவழகாய் கேட்போர் மனதைக்கவரும் வண்ணம் பிரஸங்கஞ்செய்தார்கள். தினந்தோறும் 250பிராமணர்களுக்குமேல் கூடினர். ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்ரஹபலத்தால் இச்சபை மேன்மேலும் அபிவிருத்தியடையும்படி ஸ்ரீமதாசார்யபாதகமலங்களை விநயத்துடன் வணங்குகின்றேன்.

சுபம், நா. கிருஷ்ணசாஸ்திரி,
நிர்வாஹஸபை மெம்பர்.

# ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷித சரிதம்.

(224-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு ஒருஸமயம் நமது தீக்ஷிதாள் மாமனாரால் அழைக்கப் பட்டுத்தமது பத்னியான மங்களாயகியோடு அடையபில் என்று பிரஸித்தமான சூரஸேனகிராமத்திற்குச் சென்றபோது அவ்வூர் ஸ்திரீபுருஷர்கள்யாவரும் இம்மஹானைக்கண்டதும் இவர்தானு நமது ஆச்சானுவின் பர்த்தா? என்கவே நமது தீக்ஷிதாள் நம்மை யாவரும் எங்கும் புகழ்கிறார்கள். மாமனாரின் கிராமமானதால் இங்கு இல்லாளான ஆச்சானுவுக்குப்புகழ் பரவியிருக்கிறதென்று அர்த்தங்கொண்ட अस्मिन्ग्रामे आचालुप्रसिद्धिः என்றார்கள். இம் மொழியை நம் நாட்டுக்கிழவிகள்கூட பாம்பரையாய்க்கேட்டுச் சொல்லிவருகின்றனர்.

இவ்வாறு நமது தீக்ஷிதாள் ஸோமயாகம்முதலான ச்ரௌத கன்மாக்களை விசேஷமாகச்செய்து பரமேச்வானுக்கு அர்ப்பணஞ் செய்து மஹாதேஜஸ்வியாய் விளங்கினர்.

## 13. வாஜபேயயாகம்.

ஒருஸமயம் தீக்ஷிதமணிகளான இம்மஹான் வாஜபேயம் என்ற யாகவிசேஷத்தால் அத்வரபதியான பரமேச்வரனையாரா திக்க எண்ணங்கொண்டு வஸிஷ்டதுல்யாளான ரித்விக்குகளையும் மற்றுமுள்ள யாகஸம்பாரங்களையும்பெற்று வாஜபேயயாகஞ்செய் பவர்களுக்கு மஹாராஜா வெண்குடைபிடித்து மந்திரிகள் சாமரம் போட்டு கௌரவிக்கும்படிசாஸ்திரங்கள் அறிவிப்பதாலே தஞ்சை நாஸிம்மராஜன் வேலூர் சின்னபொம்மன் முதலானவர்களுக்கும் அறிவித்து யாகதீக்ஷைசெய்தார். யாகம் வெகுவிமர்சையாய் நடந்தது. யர்காக்னியிலிருந்து உண்டான ஹவ்யகந்தமும், புகை யும் அங்கு கூடினயாவரையும் பாவனமாக்கின. அந்த யாகத்தில் பசுக்கள் (ஆடுகள்) அதிகமாக ஏற்பட்டபடியாலே யூபஸ்தம்பத் தில் கட்டும்போதே முகம்வாடி கண்கள் சுழன்று குரகுரா என்ற சப்தமிடும் அப்பசுக்களைக்கண்ணுற்ற தீக்ஷிதாள் கருணைகொண்டு வேதமே உன் கருத்து அவ்விதமானது, எனக்கு நீயே பிரமா ணம், ஆச்சர்யமாயிருக்கிறது உனது விதி என்று சிறிது சஞ் சலங்கொண்டார். அப்போது மற்ற ரித்விக்குகளும் ஸபையோ

ரும் மஹானே! ஸர்வஞ்ஞரான உமக்கு அநுசாஸனஞ்செய்பவர் யார்? விதிவசனங்கள் நமக்குப்பிரமாணமாயிருக்கு சஞ்சலப்படுவது தகாது என்று அஞ்சலிபந்தஞ்செய்து அறிவித்தனர். உடனே நமது தீக்ஷிதாள் யக்ஞபதியான பரமேச்வரனைத்தியானித்து அடியிற்கண்ட ச்லோகங்களை மொழிந்தார்.

या ब्रह्मणो निश्वसितं यदुक्तिः सत्याऽनिशं यज्जपतश्च मुक्तिः ।
सैवप्रमाणं ननु मादृशानां श्रुते नमस्ते भवतीगतिर्नः ॥
विहितं विपरीतमेकतः स्यात् तदपि स्यात्कुहचिच्चसाधुकर्म ।
गहनां गतिमस्यकर्मणोऽपि श्रुतिभावं च न विद्महे महेश ॥

त्वामध्वरस्य पतिमीश्वर रुद्रयोनिं
प्राग्वार्षिकाम्बुदनिभान्मरणाद्यजध्वम् ।
देवीसखं त्रिणयनं शितिकण्ठमीशं
ध्यायध्वमित्यपि च वेदवचांसि जाने ॥

आदावनुष्ठेयमवश्यमेतत्पश्चाद्गुरूक्त्याऽनुभवेन शास्त्रैः ।
ध्येयः शिवोऽथर्वशिखासमासैरिति स्फुटं भातिहि कश्चिदर्थः ॥

அதின் கருத்தாவது

யாதொரு ச்ருதியானது பரம்பொருளின் முககமலத்திலிருந்து வெளிப்பட்ட மூச்சுக்காற்றோ எதன் மொழி ஸத்யமோ எதை ஜபிக்கிறவனுக்கு முக்தியேற்படுகிறதோ அதுவே என் போன்றவர்களுக்குப் பிரமாணமாகிறது. சுருதியே உமக்கு நமஸ்காரம், நீயே எனக்கு கதி, பரமேச்வரனே விதிக்கப்பட்டது ஒருபுறம் விபரீதமுமாகலாம், அதுவே ஒருபுறம் ஸத்யகர்மாவாகலாம் இக்கர்மாவின் நுட்பமான கதியையும் வேதத்தின் ஆசயத்தையும் அறிகிறோமில்லை.

ஈச்வரனே! எக்காலமேற்படுமென்று நிர்ணயித்துக்கொள்ள முடியாத மரணமேற்படுவதற்குமுன்னமேயே அத்வரபதியும் ருத்திரனும் அக்னிரூபியுமான பகவானைப்பஜியுங்கள், பரதேவதையின் காந்தனும் முக்கண்ணனும் நீலகண்டனுமான ஈசனைத்தியானஞ் செய்யுங்கள் என்ற வேதவார்த்தைகளைமட்டிலும் அறிகிறேன்.

இந்த ஸகல கன்மாவும் ஆரம்பத்தில் அநுட்டிக்கத்தக்கதே, பிறகு ஸத்குருக்களினுபதேசத்தாலும் அநுபவத்தாலும் சாஸ்திர ஆராய்ச்சியாலும் சிவபெருமான் தியானிக்கத்தக்கவரேயென்று ஒருபொருள் அதர்வோபநிடத்தால் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

एवं सभायां निगदन्पुनस्तान् पशूनभिप्रेत्य सचाहमन्त्रैः ।
नवाऽध्वरेऽस्मिन् म्रियसे पशो त्वं नन्दिष्यसीशस्य पदं समेत्य ॥
त्वं सचिदानन्दघनः शिवोऽसि स्वयं हि शस्त्रादिभिरप्रधृष्यः ।
देहादिकं सर्वमिदं मृषैव नत्वांतुदामीह नवा म्रियेथाः ॥

என்று ஸபையில் வேதாசயத்தைப் பிரமாணமாக வெளியிட்டுக்கொண்டு தீக்ஷிதாள் மறுபடியும் அப்பசுக்களைநோக்கி பசுவே இந்த யாகத்தில் நீ மரிக்கவில்லை. ஈச்வரனுடைய நித்தியநிரதிசயமான ஸ்தானத்தையடைந்து பேரானந்தமடையப்போகின்றாய் நீ ஸச்சிதாநந்தகனனான சிவனாகிறாய், சஸ்திரம்முதலான கருவிகளால் நாசமாக்கமுடியாதவனாகிறாய், இந்த தேஹம்முதலான யாவும் தோற்றமே, நான் உன்னைப்பிடிக்கவில்லை, நீயும் மரிக்கவில்லை என்று மந்திரார்த்தத்தைப் பிரகாசப்படுத்தினார்கள்.

ச்லோகத்தில் அத்வைதபாவனையாகப் பசுக்களைப் பசுவே என்று ஒன்றாகவே கருதி அவைகளுக்கு அத்வைதத்தையுபதேசித்து தேஹாபிமானத்தைப் போக்கடித்து பரமாத்ம ஸ்வரூபத்தை விளக்கி நேத்திரதீக்ஷைசெய்தார்கள், உடனே அவைகள் ஆலம்பனஞ்செய்யப்பட்டன.

கலிக்கு அதிகாரமேற்பட்டகாலமானதால் சிலர் ஒவ்வொரு மூலைகளிலிருந்து தாங்கள் ஸர்வக்ஞர்கள்போல் நினைத்து பசுஹிம்ஸாரூபமான யாகத்தை நிந்திக்கும்போது அதையுணர்ந்த நமது தீக்ஷிதாள் பகவானை இவ்வாறு துதித்தார்.

## 14. பசுக்கள் விண்ணுலகஞ்செல்வது.

हन्त महेशाव सतांपते प्रसीदाऽध्वरेषु विश्वासम् ।
कलयति यथाहि लोकः तद्वत् देवेश्वराकलय ॥

ஆச்சர்யம் நல்லோரைப்பாதுகாக்கும் மஹேசனே! அநுக்கிரஹஞ்செய்யவேண்டும். ஜனங்கள் எங்ஙனம் யாகத்தில் நம்பிக்கை பெறுமோ அங்ஙனம் தேவரீர் அருள்புரியவேண்டும் என்றார்.

அப்போது ஸகல ஜனங்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்த வாஜபேயயாகத்தில் ஆலம்பனப்பட்ட அப்பசுக்கள் யாவும் பழைய துணிகளைக்களைந்து புதியவஸ்திரங்களையுடுத்தினவர்கள்போலே பசு சரீரங்களைத்தள்ளி திவ்விய சரீரங்களைப்பெற்று ஆகாயத்தில் ஜ்வலிக்கின்ற விமானங்களில் ஏறவே வானவப்பெண்கள் தங்களது கைவளைகளிலொலிக்கும் இரத்தினகாந்தியோடு சேர்ந்த சாமரங்கள் வீசினார்கள், கந்தர்வர்கள் இனிய கானஞ்செய்தனர், ஏற்கனவே நிந்திக்கத்தலைப்பட்ட சிலரும் அவ்வாச்சர்யத்தைக்கண்டு அம்மஹானைத் தூற்றியபாபத்திற்கு அம்மஹானின் சரணகமலஸேவையைத்தவிர பிராயச்சித்தம் வேறு கிடையாது என்று தீர்மானித்து தீக்ஷிதமணிகளின் பாதகமலத்தில் விழுந்து பணிந்தனர். மற்றைய பெரியோர் யாவரும் அம்மஹானின் வாக்கே சுருதியின் ஸத்தியமான ஆசயம் என்பதை இவ்வாச்சர்யதர்சனத்தால் ஸம்சயமறத்தீர்மானித்து தீக்ஷிதமணிகளை அஷ்டமூர்த்தியென்றே கொண்டாடினார்கள். அப்போது திவ்யவிமானத்திலேறிய அவைகள் தீக்ஷிதமணிகளைப் பார்த்து அஷ்டமூர்த்திஸ்வரூபியான தீக்ஷிதாளே தங்களுடைய யாகத்தில் உபயோகப்பட்டு நேத்திரதீக்ஷையையும் பெற்ற நாங்கள் எங்களது வம்சத்தாரோடு உத்தமஸ்தானத்தையடைந்தோம் என்று துதித்துக்கொண்டு வானுலகஞ்சேர்ந்தன. அதையோஜிக்கும்போது விண்ணுலகிலும் இம்மஹானின் மஹிமையைப்பிரகாசப்படுத்தச்சென்றனவோ என்று தோன்றிற்று.

தீக்ஷிதமணிகளும் பாமேச்வரப்ரஸாதத்தை வியந்து யாகதீக்ஷையைக்குறைவின்றி அநுஷ்டித்தார்.

கீழ்கண்ட தீக்ஷிதமணிகளின் ச்லோகங்கள் வியாஸஸூத்திரம் அதற்கு ஆச்சார்யாள் அநுக்கிரஹித்த பாஷ்யம்முதலானவைகளின் கருத்தை நமக்குத் தெளிவுறப்போதிக்கின்றன.

மூன்றாவது அத்தியாயம் முதலாவது பாதம் 25-வது ஸூத்திரம்.

अशुद्धमिति चेन्न शब्दात् ।

यत्पुनरुक्तं पशुहिंसादियोगादशुद्धमाध्वरिकं कर्म तस्यानिष्टमपि फलमवकल्पते इत्यतोऽमुख्यमेवानुशयिनां व्रीह्यादिजन्मास्तु तत्र

गौणीकल्पनानर्थिकेति तत्परिह्रियते । न । शास्त्रहेतुत्वात् धर्माधर्म विज्ञानस्य । अयं धर्मोऽयमधर्म इति शास्त्रमेव विज्ञाने कारणम् ।

என்று பரமாசார்யாள் விஸ்தாரமாக நிரூபணம் பண்ணி முடிவில்

तस्मात् विशुद्धं कर्म वैदिकम् । शिष्टैरनुष्ठीयमानत्वात् अनिन्द्यमानत्वाच्च ।

என்றுகீழ்ச்சொன்னகருத்தையே திருடப்படுத்தியிருக்கின்றார்கள்

## 15. வெண்குடை பிடித்தல்.

அப்போது தஞ்ஜைமஹாராஜாவான நரஸிம்மன் அம்மஹான் யாகத்தில் கைங்கர்யஞ்செய்து ஜன்மஸாபல்யம் பெறவேண்டுமென்று திருடபக்தியுடன் அங்குவெளியில் தங்கியிருந்துஸந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தான். பிறகு ஒரு பத்திரிகை எழுதி பிராம்மணர்கள்மூலமாய் தீக்ஷிதமணிகளுக்கு அனுப்பினான். தீக்ஷிதமணிகள் அப்பத்திரிகையைப்படிக்கும்படி ஓர் சிஷ்யனுக்கு அநுமதி கொடுக்கவே அதைப்படித்தான். கருணாநிதியான பகவானே தங்களது கிங்கரன் நரஸிம்மன் அநுதினமும் முக்காலங்களிலும் பணிந்துசெய்துகொள்ளும் விக்ஞாபனமாவது தங்களது அவபிருதத்தைக் காணவிரும்புகின்றேன், தங்களது திருவடித்தாமரைகளுக்கு யோக்யமாக விலை மதிக்கப்பெறாத பட்டு பீதாம்பரங்கள் ஆபரணங்கள் தனங்கள் முதலானவைகளை ஆறு ஒட்டகங்கள் நிரம்பக்கொண்டுவந்திருக்கின்றேன். அவைகளை என்னிடத்துள்ள அன்பின்மேலிட்டால் ஏற்றுக்கொள்ளவேண்டும். யாகாவஸானத்தில் யான் வெண்குடை பிடிப்பதையங்கீகரிக்கவேண்டும், அதனால் எனது ஜன்மா[illegible]வப் பயனுள்ளதாக்கிக்கொள்ளவேண்டுமென்று வணக்கத்துடன் எழுதியிருந்த வசனத்தை தீக்ஷிதமணிகள் ஏற்றுக்கொண்டு அந்த திரவியங்களைக் கொண்டுவரச்செய்து அக்னிமூர்த்தியான சிவபெருமானிடமே அர்ப்பணஞ்செய்துப் பிரதிலேகமனுப்பினார். அம்மஹாராஜன் எழுந்து வணங்கி அப்பிரதிபத்திரிகையை கண்ணில் ஒத்தி வெகு களிப்புடன் படித்தான்.

உங்களுடைய பரமக்ஷேமத்திற்காக இரத்தினாலங்கிருதங்களான உபவீதம் ருத்ராக்ஷமாலை குண்டலம் பீதாம்பரம் ஸ்வர்ண பீடம் வெண்குடை பட்டுவஸ்திரங்கள் முதலானவை ஏற்றுக்

கொள்ளப்பட்டன. மறுபடி அவபிருக்காலம் ஈனெபதினம். தாத்தாசார்யாள்முதலான சிலரின் பேதவார்த்தைக்கிடுபட்டு பொம்மராஜன் வரவில்லை. மேம்பட்ட குணங்கள் பொருந்தினவனும் வித்வான்களைச்சிரலால் வஹித்து ஆதிசேடனைக்காட்டிலும் பெருமைபெற்றவரும் மிக்க கீர்த்திவாய்ந்தவருமான தாங்கள் இங்கு வந்து வாஜபேயத்தைச் சிறப்பிப்பதே எனக்கு வெகு ஸந்தோஷம் என்று எழுதியிருந்தது.

இங்கு ஒரு அபிப்பிராயம் அறிஞர்கள் ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். முற்காலத்தில் பெரியோர்கள் ஸ்வமதஸ்தாபனத்தில் ஆழ்ந்த நோக்கங்கண்டவர்களாய் இருந்ததால் அனேக பிறமதஸ்தர்கள் விரோதிகளாகத் தலையிடுவது ஸஹஜமாயிருந்தது. ஆகையால் நமது தீக்ஷிதாளின் மஹிமையை எழுதப்புகுந்த எனக்கு அவர்களிடம் தாஸபங்கொண்டு இடையூறுசெய்து முடிவில் தீ பத்திவிழுந்த விளக்கு வெட்டுப்பூச்சிபோல் தமக்கே தீங்கு விளைவித்துக்கொண்ட அனேகர்களின் வாலாறு பிரமாண புரஸ்ஸரமாய்க் கிடைத்திருக்கிறது. ஆகையால் கூடியவரையில் மற்றவர்கள் வேறுவிதமாக எண்ணுமலிருக்கும்படிஸமாஸமாகவே எழுதமுயல்கிறேன். எதாவது தவறுதலாகத் தோன்றினும் அது என்னுடைய ஆக்ரஹத்தால் எழுதப்பட்டதாக நினைக்கக் கூடாது என்று இடையில் தெரிவித்துக்கொள்கிறேன். கீழ்கண்ட பிரதிலேகத்தைப் படித்துணர்ந்த மகாராஜன் இவ்வாறு உள்ளத்தில் நினைத்துக்கொண்டான்.

பரலோகத்திற்கு இடையூரான மஹான்களின் சாபத்திற்குப் பாத்திரபூதாளான துஷ்டர்களின் வாக்குகளாகிற வலையில் சின்ன பொம்மராஜனும் சிக்கிக்கொண்டானே? ஈச்வராவதாரமான நமது தீக்ஷிதாள் வேதமார்க்கத்தை நிலைநாட்டக்கருதியே இந்த வேள்வியைச் செய்கின்றனர். ஆகையால் அடியேனும் சிறிது கைங்கர்யஞ்செய்து ஈச்வரப்ரஸாதத்தையடைய சமயம் வாய்ந்திருக்கிறதுஎன்று தன்னை பாக்கியம்பெற்றவனுக எண்ணிக்கொண்டான்

மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து தனது அநுஷ்டானத்தைச் செவ்வெனமுடித்துக்கொண்டுஅம்மஹாராஜன் அனேக கவிவாணர்களையும் முன்னிட்டுக்கொண்டு, வஸிஷ்டர் முதலான முனிவர்களால் சூழப்பட்ட பிரம்மதேவனைப்போல், அத்வர்யு முத

லான ரித்விக்குகளால் சூழப்பட்ட தீக்ஷித மணிகளையடைந்து சிறிது தூரத்திலேயே வணங்குகின்றான்.

உடனே தீக்ஷிதாள்கடாக்ஷத்தால்அனுக்ரஹித்தனர். அந்த வாஜபேயயாகம் நிறைவேறி அவபிருதஸ்நானஞ் செய்து ஸகலரும் போனந்தமடைந்தனர். அப்போது நமது தீக்ஷிதாளை வித்வான்கள் ரதாரோஹணஞ்செய்விக்கவே நகரப்பிரதக்ஷிணம் ஸகலஜனங்களுடைய கோலாஹலத்தோடு சிறப்பாக நடைபெற்றது. மஹாராஜன், முத்துசரங்கள் தொங்கப்பெற்றதும் தங்கப்பிடிப்புள்ளதுமான வெண்குடையைப்பிடிக்க, மந்திரிகள் வெண்சாமரம்வீசவும், ரித்விக்குகள் வேதகோஷஞ்செய்யவும் பற்பல மங்கள வாத்தியங்கள் முழங்கவும் வாஜபேயயாகம் மங்களோத்ஸவமாய்நிறைவேறியது. தான் வெண்குடைபிடிக்கபாக்கியம் பெற்றேனே என்று மஹாராஜன் தன்னை மகிழ்ந்துகொண்டான். மஹான்களுக்குக் கைங்கர்யம் பண்ணுவதே ஜன்மஸாபல்யம் என்பது இதனால் வெளியாயிற்று.

## 15. கவிஸ்துதி.

மேலும் நரஸிம்மராஜன் கவிவாணர்களைப் பார்த்து கவிமணிகளே! உங்களது கவிதையாகிற வாணீ நர்த்தனஞ்செய்வதற்கு இச்சமயமே சாலவும் சிறந்தது. இந்த வித்வத்ஸபை யாவருடைய மனோபீஷ்டத்தையும் அளிக்கவல்லமை பொருந்தினது என்று சொல்லவே பௌதிகன் என்ற கவிமணி இவ்வாறு புகழ்ந்தார்.

आम्नायवागविषयोऽपि कृपाम्बुराशिः
अप्पय्यशब्दविषयोऽवततार शम्भुः ।
तच्छत्रचामरमुखच्छलतः सुधांशु
गङ्गादयः तमाश्रितः किमु संविभान्ति ॥

கருணைக்கடலான பரமசிவன் வேதவாக்குக்கு எட்டாதவராயினும், அப்பய்யாள்என்ற சப்தத்திற்கு விஷயமாய் அவதரித்தார். அமிருதகிரணன், கங்கை முதலானவர்கள், அவாளுக்கு நாற்புறமும் வெண்குடை, சாமரம் முதலான வியாஜத்தால் விளங்குகின்றனவானன்ன? பிறகு சுகமுகன் என்றகவிமணி வர்ணித்ததாவது-

जिष्णुर्दण्डधरो ......................राजन्भवान्
वर्तन्ते ननु विस्मया दानेमिषा नानाजनाः सर्वतः ।
अध्वर्युप्रमुखैर्व्रती परिवृतो ब्रह्मा वसिष्ठादिभिः
श्रीमानप्पय्यमूर्तिरेव जयतीत्यस्मन्मनो निश्चयः ॥

இங்கு முதல்பாதம் சிறிது Manuscript அழிந்திருப்பதால் எழுத முடியவில்லை.

வேந்தனே! தாங்கள் ஜயசீலர், துஷ்டசிக்ஷணஞ்செய்கின்றவர், இந்த யாகவைபவத்தை பற்பல ஜனங்கள் இமைகொட்டாமலே ஆச்சர்யத்துடன் நாற்புறமும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். அத்வர்யுமுதலான ரித்விக்குகளால் சூழப்பட்ட இம்மஹானைப் பார்க்கும்போது வஸிஷ்டர்முதலான மஹரிஷிகளால் சூழப்பட்ட பிரம்மதேவனே அப்பய்யதீக்ஷிதாளின்ரூபமாக அவதரித்துவிளங்குகிறார் என்று எங்களது திருடமான திண்ணம்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## மத்ரப்ராந்திய ப்ராமணமஹாஸபையின்

# த்ரைமாஸிக அறிக்கை.

காசியில் நடந்த அகிலபாரதவர்ஷீய ப்ராம்மணமஹாஸபையின் 10வது தீர்மானத்தின்படி இச்சபை சென்ற டிஸம்பரில் சென்னையில் துவக்கப்பட்டது. இதன் தலைவர் வேதாந்தபூஷணம் ப்ரம்மஸ்ரீ கருங்குளம், கிருஷ்ணசாஸ்திரிகளவர்கள், மைலை ஸம்ஸ்கிருத கலாசாலைத் தலைவர் சாஸ்திரரத்நாகரங்களாகிய ப்ரம்மஸ்ரீக்கள் யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களும், விச்வநாதசாஸ்திரிகளவர்களும் உபதலைவர்களாவர். அடியேனும் தேதியூர் ப்ரம்மஸ்ரீ சுப்ரமண்யசாஸ்திரிகளும் காரியதரிசிகள். ஆனால் பின்னவர் தனது கட்டணத்தைக்கட்டி, நாளதுவரை ஸபைமெம்பராகக்கூட ஆகவில்லை.

### காரியாலயம்.

தலைவரும் காரியதரிசியுமிங்குஇருப்பதால் மூலஸபைக்காரியதரிசியின் அபிப்பிராயத்திற்கிணங்க, சென்னை தம்புசெட்டிவீதி

154-செ. வீட்டிலேயே ஷ்டி ஸபை கார்யாலயம் அமைக்கப்பட்டது. இதற்கு யாதொரு கட்டணமுமில்லாமல் இலவசமாக இடமளித்ததற்காக ப்ரம்மஸ்ரீ அபிஷவ்யாஸ, ச்வேதாரண்யம் நாராயணயஜ்வா அவர்களுக்கு இச்சபை நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. அடிக்கடி நடக்கும் உபன்யாஸங்களுக்கு அதேவீதியில் 119செ.ஸ்ரீசங்கரமடத்தையளித்ததற்காக ஸ்ரீஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கரபகவத்பாதாளுடைய மஹாமஹிமைபொருந்திய திவ்யசரணாரவிந்தங்களுக்கு ஸாஷ்டாங்கமான நமஸ்காரத்தைச் செலுத்துகின்றது.

## ஸப்யர்கள்.

இதுவரை வருடச் சந்தா ரூ. 1—0—0 செலுத்தி நிர்வாஹ மெம்பர்களானவர்கள் ஸங்க்யை 30. வருஷச்சந்தா 4 அணா செலுத்தி ஸாதாரண ஸப்யர்கள் ஆக ஆனவர்கள் ஸங்க்யை 60, மதுரை ப்ரம்மஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள், ப்ரம்மஸ்ரீ சிவராம கிருஷ்ணசாஸ்திரிகள் போன்றவர்களும், திருச்சி ப்ரம்மஸ்ரீ விச்வநாதசாஸ்திரிகள், போலகம் சுந்தரசாஸ்திரிகள் போன்றவர்களும், சென்னையில் ஸபைத்தலைவர்கள் போன்றவர்களும், காட்டுமன்னார்குடி ஸ்ரீஉமாமஹேச்வர சாஸ்திரிகளும் ஸபையின் நோக்கத்தை நன்குணர்ந்து உடனே சந்தா செலுத்திச் சேர்ந்தனர். ஸ்ரீ போலகம் சாஸ்திரிகளவாள் ஸ்ரீகாசி ஸபை நடவடிக்கை தீர்மான புத்தகங்களில் 50 விற்று ரூ 6 அனுப்பியிருக்கின்றனர். அடியேன் ஜீவனவிருத்தியையும் பார்த்துக்கொண்டு ஸபைமாணவர்களுக்கு இலவசமாகப் பாடத்தையும் சொல்லிக்கொண்டு வேறொருவர் ஸஹாயமுமில்லாமல் அங்கத்தினரைச் சேர்க்கப்போகவேண்டியிருப்பதாலும் இயற்கையிலேயே இதுபோன்ற வைதிகஸபைகளில் சேர்ந்து ஒற்றுமையுடன் ஸமூகத்திற்குழைக்க நம்மவர் முன்வாராததாலும் அங்கத்தினர் ஸங்க்யை மிகக்குறைவாகவேயிருக்கிறது. காசிக்கு வந்து ஸபையை கவனித்தவரில் சிலரும் பல கடிதங்களுக்கு பதிலெழுதாததும் ஸப்யராகச் சேராததும் வருந்தத்தக்கது. இனியாவது சேரவேண்டுகிறேன்.

## இதரஸபைகளைச் சேர்த்தல்.

இச்சபைக்குப் பல கிளைஸபைகளை ஏற்படுத்த எண்ணி, ஏற்கனவே உள்ள ஸபைகளை இத்துடன் சேர்த்தோம். சேர்ப்ப

தென்பது அந்தந்த ஸபையார் ஓர் ப்ரதிநிதியை இச்சபைக்குத் தேர்ந்தெடுத்து நிர்வாஹ ஸப்யருக்குறிய ஒரு ரூபாயை செலுத்துவதாம். அங்ஙனம் முத்தியாலுபேட்டை, அமாகலாவிலாஸினீ ஸபை, வைதிகஸேவக ஸபை, சிஷ்டாசார பரிபாலநபரிஷத், திருவல்லிக்கேணி வேதாத்யயன ஸபை சைதாப்பேட்டை ஸ்ரீஸத்வித்யாலயம், கீழூர் ஆர்யதர்மாபிவிர்த்தினீ ஸபை, மதுரை புராணப்ரவசனஸபை, முதலியவைகள் இச்சபையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புதிதாக மாம்பலம், விழுப்புரம், திருவாமாத்தூர் முதலியவிடங்களில் ப்ராமணஸபை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுபோல் புதிய ஸபைகளை ஏற்படுத்தும்படியும் உள்ள ஸபைகளை இத்துடன் சேர்க்கும்படியும், கனதனவான்களுக்கும் பலகடிதங்கள் எழுதப்பட்டன. இதிலும் மற்றுமோர் முறை ப்ரார்த்திக்கிறேன்.

## வேதகாவ்யவகுப்புகள்.

தம்புசெட்டிவீதி, ஸ்ரீசங்கரமடத்திலும் கார்யாலயத்திலும் யானும் சிலஸப்யர்களும் காலைமாலைகளில் இலவசமாக வேதகாவ்ய பாடம் கற்பித்துவருகிறோம். சிறுவர்களும் சிறுமிகளுமாக 20 பேரும், பெரியோர்களில் 10பேரும்படிக்கின்றனர். இதில் புதிதாக ஓர் ருக்வேதவகுப்பும் ஏற்படுத்தப்பட்டது. சிலரது ப்ரார்த்தனையின்படி உபநிஷத்பாடமும் சாந்திபுரஸ்ஸரமாக நடைபெறுகிறது. ஈச.கேன.கடமெனும் மூன்றுபநிஷத்துகள் முடிந்தன, மற்றும் சென்னையிலேயே சிலவகுப்புகளை நடத்த ஏற்பாடாகிவருகிறது.

## ப்ரசாரம்.

ஸ்ரீசங்கரமடத்தில் காசிஸபைக்குப்போய்வந்த அடியேன் ஸ்ரீமான்களான M. N. சுப்ரமண்யசாஸ்திரிகள், ஸ்ரீஜகத்குரு ஸ்ரீசங்கரமடம் ஆஸ்தானப்ரசாரகவித்வான் பிரும்மஸ்ரீ ஜகதீச்வர சாஸ்திரிகள், உமாமஹேச்வரசாஸ்திரிகள், வி. டி. ராமசாமிஅய்யர் B.A., B.L, நாகப்பட்டணம் சுந்தரேசசாஸ்திரிகள், வைத்யநாத சாஸ்திரிகள்முதலிய பற்பல பண்டிதர்கள் வர்ணாச்ரமதர்மவிஷயமான உபன்யாஸஞ்செய்தார்கள். திருவட்டீச்வரன்பேட்டையில் ஸபைத்தலைவர் தர்மம் என்பதைக்குறித்தும் சைதாபேட்டையில் அநந்தாசார் தலைமையில் அடியேன் தர்மஸம்ரக்ஷணம் எனவும் உபன்யஸித்தோம். இச்சபையினாதாவில் ப்ரதிதினம் ஸ்ரீமடத்தில்

அடியேன் பாகவதமும் பாருவாரங்காலையில் பகவத்கீதையும் சிஷ்யன் சி. வி. ராமனுதன் துலாபுராணாதிகளும் சொல்லிவருகிறோம். அடியேன் எனது சொந்தசெலவில் மதுரைசென்று ஷை ஜில்லா ப்ராமணஸபையை நடத்த ஏற்பாடுசெய்துவந்தேன். விழுப்புரம் சென்று ஷை தாலூகா பிராமணமஹாஸபை நடத்திவந்தேன்,

## வரவுசெலவு.

நிர்வாஹஅங்கத்தவர், ஸாதாரண அங்கத்தவர், புத்தகவிலை என்ற மூன்று வகையிலும் 55—12—0 வரவு,புத்தகம் இரண்டாயிரமச்சிட்டது, தபால், வண்டி, ஸபைகூட்ட துண்டுநோட்டீஸ் முதலியவைகளில் 62—10—0 செலவாகியிருக்கிறது, இதில் அதிகப்படியாக 7—2—0 என் கையிலிருந்து செலவாகியிருக்கிறது, வரவைவிட செலவு அத்யவச்யமானதே செய்யப்பட்டிருக்கிறது. இதனது பூர்ணவிவரத்தை காரியாலயத்தில் எவரும் விசதமாகக் காணலாம். விவாஹவயதுமசோதாவிஷயமாகவும் அநாதைரக்ஷணவிஷயமாகவும், வரதக்ஷிணை விஷயமாகவும் ப்ரசாரம்செய்ய உத்தேசம்,உள்ளூரில் வலுவிலே தலையிட்டு சில கல்யாணங்களில் வரதக்ஷிணை வாங்காமலிருக்கும்படி வேலைசெய்தோம். பணமாக வாங்காமல் சீராக வாங்கப்பட்டது. ஓரளவுமநத்திற்குச் சாந்தியைக் கொடுத்தது வேலைசெய்தால் நற்பயனைக் காணலாம். அதற்கு பலர் ஒற்றுமைக்கவேண்டும். பலர் சந்தாசெலுத்தி ஸப்யராதல்வேண்டும்.

## தர்மநிர்ணயஸபை.

முதலிலே குறிப்பிடவேண்டிய விஷயமிது, ஏற்கனவே இதில் அங்கத்தவராயுள்ள வித்வான்களைத்தவிர தர்மசாஸ்த்ரஸம்சயங்களையகற்ற ஷை ஸபையில் ஸ்ரீ-மஹாமஹோபாத்யாய உ-வே. சேட்லூர் நரஸிம்மாசார்ஸ்வாமியும்,மஹாமஹோபாத்யாய சிவஸ்ரீ தண்டபாணிதீக்ஷிதரவர்களும்,அபிநவவ்யாஸ ஸ்ரீநாராயணயஜ்வா அவர்களும் கைங்கர்யம்புரிய அங்கீகரித்திருக்கின்றனர். ஸப்யர்களுக்கும், ஆர்யதர்ம பத்திராதிபர்களுக்கும் நேயர்களுக்கும் வந்தனஞ்செய்து இதை ஆதரிக்கும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவ சர்மா.

மத்ரப்ராந்த்ய ப்ராமணஸபாஸம்பாதகன்